தேர்ச்சி : 01. காலத்திற்குரிய பயன்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் கணினியையும் அதன் உள்ளார்ந்த ஆற்றலையும் ஆராய்வர்.

தேர்ச்சி மட்டம் : 1. 1 கட்டமைப்பு வரைபடமொன்றைப் பயன்படுத்தி கணினி ஒர முறைமை என்பதை விபரிப்பர்.

கணினியானது ஒரு செயலை நிறைவேற்றுவதற்கு பயனர்களுடன் வன்பொருள் மற்றும் மென்பொருளுடன் ஒரு அலகாக தொழிற்படும் முறைமையாகும்.
கணினியின் தொழிற்பாட்டை விரிவுப்படுத்த இணைக்கப்படும் வன்பொருட்கள் புறச்சாதனங்களாகும். கணினிக்கு

1. தரவுகள் அல்லது அறிவுறுத்தல்களை உள்ளிடும் சாதனங்கள் உள்ளீட்டு சாதனமாகும்.
2. தகவல்களை வெளியட பயன்படும் சாதனங்கள் வெளியீட்டு சாதனங்களாகும்.
3. தரவு மற்றம் தகவல்களை சேமிக்க பயன்படும் சாதனங்கள் சேமிப்பு சாதனங்களாகும்.

வழங்கப்பட்ட தரவுகளை முறைவழியாக்கி தகவலாக வெளியிடுதல் கணினியின் அடிப்படை பணியாகும்.